# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

**முறையீட்டு மனு எண்: 114/2017பே**
**ஆணை எண்.44 /2018 நாள்: 06 –03–2018**

**திரு. அ. தமிழ்வாணன்,**
**103, டாக்டர் அம்பேத்கர் தெரு,**
**வளவனூர்,**
**விழுப்புரம் மாவட்டம்.** — முறையீட்டு மனுதார்

**செயல் அலுவலர்,**
**வளவனூர்,**
**விழுப்புரம் மாவட்டம்.** — எதிர் மனுதார்

**ஆணை**

விழுப்புரம் மாவட்டம், வளவனூர், டாக்டர் அம்பேத்கர் தெருவினை சேர்ந்த திரு அ.தமிழ்வாணன், த/பெ திரு அர்ச்சுனன், என்பவரது 09.05.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.05.2017 அன்று பெறப்பட்டது. மேற்படி மனு 114/2017 என எண்ணிடப்பட்ட மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுவின் மீது அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ் காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு அ. தமிழ்வாணன், முறையீட்டு மனுதாரரது முறையீட்டு மனுவில் விழுப்புரம் மாவட்டம், வளவனூர் பேரூராட்சியில் நான்கு முனை சந்திப்பு அருகே பேருந்து நிழற்குடை அமைக்கப்பட்டதாகவும், இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.20.00 லட்சம் எனவும் மேற்படி நிழற்குடைக்கான அளவுகளான 26 அடி நீளம் மற்றும் 76 அடி அகலம் என்பதை தான் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்றதாகவும், ஆனால் நிழற்குடையினை மதிப்பீட்டில் உள்ள அளவுகளின்படி கட்டாமல் 26 * 76 அடிக்கு பதிலாக 15 * 76 என்ற அளவில் கட்டப்பட்டுள்ளதாகவும், இதற்கு பேரூராட்சி செயல் அலுவலர், பேரூராட்சி மன்றத் தலைவர்

திரு ஆர்.டி. முருகவேல் என்பவரின் துணையுடன் மேற்படி பணியினை குறைவான அளவில் கட்டி முடிக்கப்பட்டு 14.04.2015ல் பேரூராட்சிக்கு, ஒப்பந்தக்காரரால் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பேரூராட்சி செயல் அலுவலர் கையூட்டு பெற்றுக் கொண்டு மேற்படி முறைகேட்டினை கண்டும் காணாமல் விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்து நிறுத்தம் கட்டியுள்ள இடம் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடம் எனவும், நெடுஞ்சாலைத்துறையில் எந்த அனுமதியும் பெறாமல் பேருந்து நிழற்குடை கட்டப்பட்டுள்ளது எனவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடத்தில் எந்த ஒரு அனுமதியும் பெறாமல் பணிகளை மேற்கொள்வது குற்றம் என தெரிந்தே இளநிலை பொறியாளர் அவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் செயல் அலுவலருடன் சேர்ந்து கொண்டு இப்பணியினை மேற்கொண்டுள்ளார் எனவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 20.05.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 08.09.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி முறையீடு குறித்தான விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 14.11.2017 அன்று ஆஜராகக் கோரி முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

மேற்படி முறையீடு தொடர்பாக தல ஆய்வு மேற்கொண்டும் ஆவணங்களின் அடிப்படையில் அறிக்கை சமர்ப்பிக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 2014 பிரிவு 6(4) (b) ன் கீழ் இம்முறைமன்ற நடுவ 09.09.2017 நாளிட்ட ஆணை மூலம் கடலூர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் திரு அ. தமிழ்வாணன் இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2007 அன்று நேரில் ஆஜராகி தனது முறையீட்டு மனுவிற்கான விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"………09.05.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு தன்னால் அளிக்கப்பட்டது எனவும், வளவனூர் பேரூராட்சியில் நான்கு முனை சந்திப்பு அருகே பேருந்து நிழற்குடை கட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதன் திட்ட மதிப்பீடு ரூ 20.00 லட்சம் எனவும், 26 அடி அகலம் 76 அடி நீளத்தில் கட்டப்படவுள்ள நிழற்குடை என தன்னால் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பதில் பெறப்பட்டதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் உண்மையில்15*76 அளவில் கட்டப்பட்டு இப்பணி 14.04.2015ல் முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். டெண்டர் எடுத்தவர் பேரூராட்சி மன்றத் தலைவரின் அண்ணன் திரு டி.கந்தவேல் எனவும் இப்பணி சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து கட்டப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும், பேரூராட்சி செயல் அலுவலர், வளவனூர் பேரூராட்சி தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர் அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும்

தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். பேருந்து நிறுத்தம் கட்டப்பட்டுள்ள இடம் நெடுஞ்சாலைக்கு சொந்தமானது எனவும் தனது வாக்குமுலத்தில் தெரிவித்துள்ளார்.

இப்பொருள் தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலர், வளவனூர் தனது கடித ந.க.எண். 204/2017/அ.1/நாள் 29.01.2018ன் மூலம் தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் மேற்படி முறையீடு தொடர்பான தனது தல ஆய்வு அறிக்கையினை தனது கடித ந.க.எண். 3595/2016/பேரூ.1/நாள் 18.01.2018ன்படி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தின் ஆணையின்படி 31.10.2017 அன்று புகார் மனுதாரர் மற்றும் வளவனூர் பேரூராட்சி பொறியாளர் ஆகியோரிடம் நேரடி விசாரணை மேற்கொண்டதாகவும் வளவனூர் பேரூராட்சியில் அமைக்கப்பட்ட பேருந்து நிலைய நிழற்குடையினை மனுதாரர் மற்றும் உதவி பொறியாளருடன் 31.10.2017 அன்று கள ஆய்வு மேற்கொண்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மனுதாரர் திரு.அ.தமிழ்வாணன், நேரடி அளவுகளின்படி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் அன்றி நிழற்குடையானது அகலம் 26 அடி நீளம் 76 அடி இல்லை எனவும் 15.8அடி அகலம் 74.9 அடி நீளத்தில் அமைக்கப்பட்டுள்ளது என வாக்குமுலம் அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி பேரூராட்சியில் 2014-15ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பேருந்து நிலைய நிழற்குடை அமைக்கும் பணியில் நீளம் 21.80 மீட்டர் (72அடி) அகலம் 5.80 மீட்டர் (19அடி) இருக்கும் வண்ணம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகவும் பணி நடைபெறும்போது விழுப்புரம்-பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலைக்கு இடையூறு இல்லாமல் பேருந்து நிழற்குடை அமைக்குமாறு உதவி செயற்பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலை) மற்றும் உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சி பணிகள்) ஆகியோரால் நேரில் தெரிவித்த அறிவுரைகளின்பேரில் நீளம் 22.80 மீட்டர் (74.9 அடி) அகலம் 4.80 மீட்டர் (15.9அடி) உள்ள அளவுகளில் பணிகள் நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டது எனவும், மேலும் கூடுதலாக பேருந்துகள் வந்த செல்ல 88 அடி நீளத்திற்கு 28 அடி அகலத்திற்கு கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் உதவிப் பொறியாளர், வளவனூர் பேரூராட்சி தெரிவித்துள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி விழுப்புரம் மாவட்டம், வளவனூர் பேரூராட்சியில் பேருந்து நிலைய நிழற்குடை அமைக்கப்பட்டது தொடர்பாக புகார் மனுதாரர் மற்றும் உதவி பொறியாளருடன் 31.10.2017ல் நேரடி கள ஆய்வு செய்யப்பட்டதில் பேருந்து நிலைய நிழற்குடையானது விழுப்புரம் - பாண்டிச்சேரி தேசீய நெடுஞ்சாலைக்கு இடையூறு இல்லாமல், நீளம் 22.80 மீட்டர் (74.9 அடி), அகலம் 4.80 மீட்டர் ( 15.9 அடி) உள்ள அளவுகளில் பணி நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டு மேலும் கூடுதலாக பேருந்துகள் வந்து செல்ல 88 அடி நீளத்திற்கு 28 அடி அகலத்திற்கு கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருவதால் இதில்

முறைகேடுகள் நடைபெறவில்லை என தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி கள ஆய்வில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கடலூர் அவர்களின் அளவுகளை, முறையீட்டு மனுதாரரும் ஏற்றுக் கொண்டுள்ளதாக தனது 31.10.2017ம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, செயல் அலுவலரின் அறிக்கை, முறையீட்டு மனுதாரரின் நேரடி வாக்கு மூலம் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் தல ஆய்வு அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கையில் மேற்படி பணி நல்லமுறையில் நடைபெற்று பொதுமக்களின் உபயோகத்தில் உள்ளதாகவும் இதில் எவ்வித முறைகேடும் இல்லை என உறுதி அளிக்கப்பட்டுள்ளது. பேருந்து நிழற்குடை அளவுகளை முறையீட்டு மனுதாரரும் தனது கடிதத்தில் ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். எனவே இம்முறையீடு குறித்து தொடர் நடவடிக்கை கைவிடப்படுவதாக தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. இருப்பினும் பணி முடிவில் ஏற்பட்டுள்ள பணி அளவீடு மாற்றங்கள் குறித்து உரிய பின்னேற்பு ஆணை பெறப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளவேண்டுமென செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 06-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 8/3/18

T3/5

7/3/18

பெறுநர்

1.திரு. அ. தமிழ்வாணன்,
103, டாக்டர் அம்பேத்கர் தெரு,
வளவனூர்,
விழுப்புரம் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
வளவனூர் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கடலூர் மண்டலம்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை,
கடலூர்–607 001.